விலை சதம் 10

சுதந்திரன்

SUTANTIRAN

வ. ஆ. 2001, பங்குனி 31 உ திங்கள் (13-4-70) ஸபர் பிறை 6— புத்தகம் 24 இதழ் 12

### சுகததாசாவின் நிர்வாகத்தில்

# தனிச் சிங்கள வெறியாட்டம்!

தேசிய ஒற்றுமை, சிறுபான்மை மக்களின் பாதுகாப்பு என்றெல்லாம் வேடம் போடும் யூ.என்.பி. ஆட்சியில் தமிழ் மொழிச்சட்டம் எவ்வாறு புறக்கணிக்கப் படுகிறது என்பதற்கு இதோ மற்றோர் உதாரணம்!

1966ம் ஆண்டு தமிழரசுக்கட்சியின் நெருக்கடியால் நிறைவேற்றப்பட்ட தமிழ்மொழி விசேட விதிகள் சட்டப்படி அரசாங்கத்தினதும் அரசாங்க கூட்டுத்தாபனங்களினதும் சகல வெளியீடுகளும் அறிக்கைகளும்' தமிழிலும் வெளியிடப்படவேண்டும். ஆனல் அச்சட்டவிதிகளை நிறைவேற்றிய யூ. என். பி. ஆட்சியாளரே அதை குழிதோண்டி புதைத்து வருகிறார்கள்!


இலங்கை போக்குவரத்து சபையினரால் அண்மையில் வெளியிடப்பட்ட சம்பள விபர அறிக்கையின் புகைப்படத்தையே இங்கு பார்க்கிறீர்கள். இது தனிச் சிங்களத்தில் மாத்திரமே வெளியிடப் பட்டுள்ளது.

தமிழர்களின் நண்பன் என்று கூறப்படும் திரு. வி.ஏ. சுகததாசவின் அதிகாரத்துக் குகீழ்இயங்குப் இ,போ.ச.வில் தமிழ்ப்புறக்கணிப்பு திட்டமிட்டு நடத்தப்பட்டு வருகிறது. தமிழர்களின் நண்பன் என்றுகூறப்படுபவரது நிர்வாகத்திலேயே தமிழுக்கு இடமில்லையென்றால் யூ, என். பி. ஆட்சியில் தமிழுக்கு வேறு எங்கு இடம் கிடைக்கப் போகிறது? — இவ்வாறு கேட்கிறார்கள் தமிழ்மக்கள்!

இ. போ. ச. வின் சம்பள விபர அறிக்கை தனிச் சிங்களத்தில் மட்டுமே வெளியிடப் பட்டு இருப்பது தமிழ் உள்ளங்களை அவமதிப்புக்குள்ளாக்கியிருப்பதோடு தமிழ் மொழிச்சட்டமும் மூலைக்குக் கொண்டு செல்லப் பட்டிருக்கின்றது.

''இ. போ. ச. ஊழியர்கள் என்ன தனிச்சிங்களவர்களா? தமிழ் ஊழியர்கள் இவ்வறிக்கையால் எதைத்தான் புரிந்து கொள்ளமுடியும்? இந்த அநியாயம் ஏன் தான் தொடருகிறதோ என்று அங்கலாய்க்கிறார்கள் இ. போ. ச. தமிழ் ஊழியர்கள்.

### தமிழ்மொழிச் சட்டம் தள்ளப்பட்டது மூலைக்குள்!



200, කිරුළ පාර, කොළඹ 5. | අප්‍රේල් 6, 1970.

විධායක නොවන ශ්‍රේණිවල

සියලුම සේවකයන් වෙනුවෙන් නිවේදනයයි.

| අලුත් පන්තිය/ශ්‍රේණිය | ප්‍රතිශෝධිත පඩි ක්‍රම |
| --- | --- |
| 1. සකල මට්ටමේ ඉංජිනේරු කාර්මාන්තශාලය | |
| 5 වෙනි පන්තිය | 165 - 5 x 15 - 240 |
| 4 වෙනි පන්තිය | 175 - 5 x 16 - 255 |
| 3 වෙනි පන්තිය | 185 - 5 x 18 - 275 |
| 2 වෙනි පන්තිය | 220 - 5 x 4, 10 x 9 - 330 |
| 1 වෙනි පන්තිය | 280 - 10 x 12 - 400 |
| [illegible] | 225 - 5 x 3, 10 x 13 - 370 |
| [illegible] | 280 - 10 x 12 - 400 |

திருமலையில்

## தமிழரசு வாலிப முன்னணி மீது இரகசிய பொலிசார் பாய்ச்சல்!

திருக்கோணமலை, சித்- 13.

மாற்றுக்கட்சியினர் மூக்கின் மேல் விரலை வைக்குமளவுக்கு திருகோணமலையில் தமிழரசு வாலிப முன்னணிக் கிளைகள் பெருகிக் கொண்டு செல்கின்றன. திருகோணமலைத் தமிழரசு வேட்பாளர் திரு. பா. நேமிநாதன் அவர்களது அமோக வெற்றியின் பொருட்டு தீவிரமாக இயங்குகின்ற இவ்வாலிப முன்னணிகளின் போக்கினைக் கண்டு பொலிஸார் கூட ஓரளவு கிலேசமடைந்திருப்பதாக அறியப் படுகின்றது. இதனல்தான் இவ்வாலிப முன்னணியினரின் நடவடிக்கைகளையும், செயற்பாடுகளையும் பொலிஸார் மோப்பம் பிடிப்பதில் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

அண்மையில் பத்தாம் குறிச்சி தமிழரசு வாலிப முன்னணியின் கிளைச் செயலகத்துக்கு இரகசியப் பொலிஸார் இருவர் வந்து மேற்படி கிளையின் உத்தியோகத்தர்கள், செயற்குழு உறுப்பினர்கள் யார் யார் என்ற விபரங்களையும், எத்தனை அங்கத்தவர்கள் இக்கிளையில் அங்கம் வகிக்கின்றார்கள் என்றும் கேட்டு விசாரித்தனர். அத்துடன் வாலிப முன்னணியின் அறிக்கைகள் ஆகியவற்றைக் காட்டும்படியும், நிர்வாகஸ்தர்களின் சொந்த, தனிப்பட்ட விபரங்களைத் தருமபடியும் இவ்வாலிப முன்னணியினர் கேட்கப்பட்டுள்ளனர். ஆயினும் எத்தகைய விபரங்களும் அவ்வமயத்தில் இவ்வாலிப முன்னணியினரால் இரகசியப் பொலிசாருக்குக் கொடுபடவில்லை. மீண்டுமொருமுறை வருவதாகக் கூறிச் சென்றிருக்கின்றனர், இவ்விரகசியப் பொலிஸார்.

திருகோணமலையில் மிகவும் செல்வாக்குடனும் அதேவேளையில் நியாயமான தீவிரத்துடனும் இயங்கு

(4-ம் பக்கம் பார்க்க)

### ஒரு முக்கிய அறிவிப்பு

தமிழ் புத்தாண்டை முன்னிட்டு 14—4—70 சுதந்திரன் அலுவலக ஊழியர்களுக்கு விடுமுறை தினமாகையால் சுதந்திரன் 15—4—70ல்' மட்டும் வெளிவராது என்பதை வாசகர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

நிர்வாகி
சுதந்திரன்,

### மூன்றுவது சந்திரப் பயணம்

ஏப்ரல்: 11

சந்திரனை நோக்கி மூன்றுவது சந்திரப் பயணத்தை அப்பலோ 13 விண்வெளிக் கப்பலில் அமெரிக்க விண்வெளி வீரர்கள் இன்று நள்ளிரவுக்குப்பின் மேற்கொண்டனர். ஜோன் சுவின்ட், லோவல், பிரெட் ஹெய்ன் ஆகிய மூவருமே மூன்றுவதாக சந்திரனில் இறங்க இருக்கும் பாக்கியசாலிகளாவர்.

திட்டமிட்டுள்ளபடி ஏப்ரல் 16ம் நாள் காலை 8-14க்கு இவர்கள் சந்திரத் தரையில் கால் வைப்பார்

(4-ம் பக்கம் பார்க்க)



### அவரும்இவரும்

சிங்களம் மட்டும்சட்டத்தை வடக்கு கிழக்கு உட்பட நாடெங்கும் அமுல் நடத்துவது நாங்களே' —யூ. என். பி. அமைச்சர் ஹமீதுருேன (ஈழநாடு 11-4-70)

''யூ. என். பி. ஆட்சிக்கு வந்தால்தான் தமிழருக்கு விமோசனம் ஏற்படும்''— முன்னாள் அரைச்சபாநாயகர் மு. சிவசிதம்பரம் (ஈழநாடு 11-3-70)

### 'சிறிமா - சாத்திரி, ஒப்பந்தம் மாற்றப்பட்டு விட்டது''

கண்டி, ஏப். 11

' தமிழரசுக் கட்சியுடன் செய்து கொண்ட இரகசிய உடன்படிக்கைப் படி தேசிய அரசாங்கம் ஐந்து இலட்சம் மலையகத் தமிழரை இந்தியாவுக்கு நாடு கடத்தும் சிறிமா—சாத்திரி ஒப்பந்தத்தை கைவிட்டு விட்டது. தமிழரசுக்கட்சியும் தொண்டமானும் விரும்பியபடி சிறிமா—சாத்திரி ஒப்பந்தம் மாற்றியமைக்கப் பட்டு விட்டது. கூட்டுக் கட்சிகள் ஆட்சிக்கு வருமானல் சிறிமா—சாத்திரி ஒப்பந்தத்தை சரியாக அமுல் நடத்தி அதன் கீழ்வரும் மக்களை நாடு கடத்துவோம்''

இவ்வாறு அம்பலான்வெலவில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய சுதந்திரக்கட்சி வேட்பாளரும் முன்னாள் மினிப்பே பா. உ. வுமான திரு. எச். எம். நவரத்ன குறிப்பிட்டுள்ளார்!

### உரிமை கிடைப்பதற்கு வழியென்ன?

பாரத நாட்டின் விடுதலைக்காக காந்தி மகான் போராடினார்; அப்போராட்டத்தின் போது ஆயிரக்கணக்கான மக்கள் உயிர்துறந்தார்கள். ஆயிரக்கணக்கானோர் அல்லல்பட்டார்கள். ஆயிரக்கணக்கானோர் சிறை சென்றார்கள். பாரத தேசம் அமைதி இழந்திருந்தது. அதற்காக காந்தி தனது போராட்டத்தை நிறுத்த வில்லை. அவரது ஒரே நோக்கம் பாரத தேசத்தின் விடுதலை. விடுதலைக்காகப் போராடும்போது இன்னல்கள் இழப்புகள் ஏற்படுவது உண்மை. அதற்காக இழந்த உரிமைகளைப் பெருது பெட்டிப் பாம்பாக பதுங்க முடியுமா? எமது இனத்தின் விடுதலையைப் பெற தொடர்ந்தும் போராடுவோம். போராட்டத்தின் மூலமே இனத்தின் உரிமைகளை மீட்க முடியும்'

—வீ. தர்மலிங்கம் (சங்கு வேலி கருத்தரங்கில்)

## தமிழ்மொழிச் சட்டவிதிகளை சரியாக புரிந்துகொள்ளாமல் உளறவேண்டாம்!

### வெளி மாகாணங்களில் வாழும் தமிழர்களின் மொழி உரிமையை மீட்டதும் தமிழரசே! போலி வேடதாரிகளை சாடுகிறார் மணவைத்தம்பி!

கொழும்பு ஏப்-13

'வடக்குகிழக்குமாகாணங்களுக்கு வெளியே வாழும் தமிழ் மக்களைத் தமிழரசுக் கட்சி கைவிட்டு விட்டதாக இ. தி. மு. க என்ற லேபலுடன் யாரோ ஒரு சுழியன் மட்டக்களப்பிலே ஏதோ புலம்பி வைத்திருக்கிறார்'

'தமிழுக்காக இந்நாட்டில் போராடியவர்கள்- கண்ணீர் சிந்தியவர்கள் — சிறைக்கு சென்றவர்கள் — சித்திரவதைக்கு ஆளானவர்கள்— அடியுதைபட்டவர்கள் அனைதையுமே இழந்தவர்கள் தமிழரசுக் கட்சியினர் என்பதை இந்நாட்டு தமிழ் மக்கள் அனைவரும் புரிந்து வைத்திருக்கிறார்கள். ஆகவே தமிழ் மக்களை யாரும் ஏமாற்றி விட முடியாது.



'தமிழரசுக் கட்சி வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழும் தமிழ் மக்

(4-ம் பக்கம் பார்க்க

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குரல்

# எண்ணம்

## பௌத்த காங்கிரசுக்கு கொடுக்கும் பதிலடி என்ன?

**போதி** மரத்துப் புத்தன் உலகெங்கும் அன்பும் அமைதியும் நிலவ வேண்டுமென்றும் உலக மக்கள் யாவரும் ஒன்றே குலமென வாழவேண்டுமென்றும் போதித்தான்.

ஆனால் இங்கு—அவனது போதனைகளைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொள்ளுபவர்கள் பெரும்பான்மையினராக வாழும் நாட்டிலே இன மத வெறிக் கோஷங்கள் தாராளமாக கட்டவிழ்த்து விடப்பட்டுவருகின்றன!

அதுவும் புத்தர் பிரானது போதனைகளை பின்பற்றுவதாகக் கூறி மஞ்சள் காவி அணிந்தவர்களும், புத்தரது கருத்துக்களைப் பரப்பவென சங்கம் அமைத்தவர்களும் தமிழினத்தைக் குழிதோண்டிப் புதைப்பதற்கு—சூழ்ச்சிகளில் ஈடுபட்டிருப்பதை இந்த நாட்டு தமிழ் மக்கள் வேதனையோடு கவனித்துக் கொண்டு வருகிறார்கள்—

அகில இலங்கைப் பௌத்த காங்கிரஸ் என்பது பௌத்த மத கருத்துக்களை பரப்புவதற்கெனத் தோன்றிய ஒரு ஸ்தாபனம்!

ஆனால் அது ஈடுபடுவதோ தமிழினத்தை ஒழித்துக்கட்டி-அதன் தனித்தன்மையை கெடுத்து—இலங்கை முழுவதையும் சிங்கள பௌத்த நாடாக்கும் சூழ்ச்சி வேலைகளில்!

தமிழ் பேசும் மக்களுக்கு எந்த ஒரு சிறு சலுகையும் தரப்படுவதை இந்த ஸ்தாபனம் விரும்புவதில்லை!

மாவட்டசபை மசோதாவை நிறைவேற்றவிடாது குழப்பிக் கொட்டியதில் இதே பௌத்த காங்கிரசுக்கும் பெரும் பங்குண்டு!

திருமலை கோணசராலயப் பகுதியை இந்துக்களின் புனித நகராக்காமல் தடுப்பதில் முன்நிற்பதும் இதே பௌத்த வெறிக் கூட்டம் தான்!

இந்தப் பௌத்த வெறியர்கள் தான் அடுத்து வரும் புதிய அரசாங்கத்திடம் சமர்ப்பிப்பதற்கு 60 கோரிக்கைகளை நிறைவேற்றி வைத்திருக்கிறார்களாம்!

அவற்றுள் இரண்டு—இந்நாட்டுத் தமிழினத்தை ஒழித்துக் கட்டும் சூழ்ச்சி நிறைந்தவையாகும்.

கள்ளக் குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு வடக்கில் சிங்களவரைக் கொண்டு சென்று குடியேற்றவேண்டுமென்பது ஒரு கோரிக்கை!

தமிழ் பேசும் மக்களை இந்நாட்டிலிருந்து பூண்டோடு வேரறுக்க ஒரே வழி அவர்களுக்கெனத் தனியொரு பிரதேசம் இல்லாமற் செய்வதுதான். அதைத்தான் 1947 முதல் 1956 வரை யூ. என். பி. அரசாங்கம் தமிழ் காங்கிரசின் ஒத்துழைப்புடன் செய்து வந்தது!

கிழக்கு மாகாணத்தின் பெரும்பகுதி தமிழ் பேசும் மக்களிடமிருந்து அபகரிக்கப்பட்டது இக்காலகட்டத்தில்!

திருகோணமலையை முற்றாக ஆக்கிரமிக்க இப்பொழுது முயற்சிகள் நடக்கின்றன.

இந் நிலையில் வடக்கையும் தனித் தமிழ் பிரதேசம் என்ற நிலையிலிருந்து மாற்றி சிங்களப் பிரதேசமாக்க திட்டமிடப்படுகிறது; அதற்கு யோசனை கூறுகிறது பௌத்த காங்கிரஸ் என்னும் இந்த மத வெறிக் கூட்டம்.

எந்த விலை கொடுத்தும் சிங்களக் குடியேற்றத்திலிருந்து தமது தாயகத்தை—ஈழத் தமிழகத்தை—தமிழினம் காப்பாற்றியே தீரும் என்பதை பௌத்த காங்கிரசுக்கும் ஏனைய சிங்கள வெறியர்களுக்கும் அழுத்தந்திருத்தமாக கூறிவைக்கிறோம்.

இதே போல இலங்கைப் பிரஜையாக பதிவு செய்யப்படும் மலைநாட்டுத் தமிழருக்கு சிங்கள அறிவுத் தேர்ச்சியை கவனிக்க வேண்டுமென்பது அயன் சிமித் ஆட்சியில் கூட காணக்கிடையாத இன வெறியாகும்

நாம் முன்பே சுட்டிக்காட்டியது போல, தமிழினத்தை சிதைத்துச் சிறுபித்து நாடு முழுவதும் பௌத்த சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு உட்படுத்த பௌத்த காங்கிரஸ் திட்டமிட்டு சூழ்ச்சி செய்கிறது.

பௌத்த காங்கிரஸ் புதிய அரசாங்கத்திடம் சமர்ப்பிக்க விருப்பதாக கூறியுள்ள இந்த இரண்டு கோரிக்கைகளும் ஈழத் தமிழினத்தை வேரோடு வெட்டி வீழ்த்தக் கூடியவையாகும்.

இத்தகைய பௌத்த சிங்கள வெறியர்களுடன் போராடி தமிழ் இனத்தின் தனித்துவத்தையும் தமிழ்ப் பிரதேசத்தையும் பாதுகாக்கவல்லவர்கள் தமிழரசுக் கட்சியினரே என்பதில் எந்த தமிழனுக்கும் ஐயம் இருக்கமுடியாது.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகம் என்பதை இரு பெரும் சிங்களக் கட்சிகளைக் கொண்டும் எழுத்து மூலம் ஒப்புக்கொள்ளவைத்த சாதனையைப் புரிந்தது தமிழரசுக் கட்சியன்றி வேறு எந்தக் கட்சி? 1956ம் ஆண்டுக்குப் பின் அரசாங்கத்தால் நடத்தப்பட்டுவந்த திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை கட்டுப்படுத்தியது தமிழரசுக் கட்சியன்றி வேறுயார்?

பௌத்த சிங்கள வெறியர்களுக்கு தகுந்த பதிலடி கொடுக்க—ஈழத் தமிழகத்தை பாதுகாக்கவல்ல முழுசக்தியையும் தமிழரசுக் கட்சியின் கையில்தான் சிந்தாமல் சிதறாமல் தமிழினம் ஒப்படைக்க வேண்டும்!

அதுதான் பௌத்த காங்கிரசின் இன ஒழிப்புத் திட்டத்...

# ஒற்றையாட்சியை ஒழித்துக்காட்டாதவரை தமிழினத்துக்கு விமோசனம் இல்லை

சனநாயக வழிகளிலே சென்றலெல்லாம் தலைசிறந்த ஆட்சிமுறை சமஷ்டி ஆட்சி முறையேயென்று சொல்லலாம். ஒரு சாரார் சிறப்புவாழும் அதேநேரத்தில் மற்றவரையும் வாழவிடும் ஒரு நல்ல மார்க்கமிது. வேற்றுமை மனப்பான்மை கொண்ட மக்கள் அந்த வேற்றுமையையே தம்முள் ஒற்றுமையேற்பட்டு இணைப்பு இறுகி, நல்லாட்சி ஸ்திரமாவதற்காக பயன்படுத்திய — படுத்துகிற— ஒழுங்கு அது.

### சமஷ்டி பிரிவினையா?

இந்த நாட்டின் அரசியல் வாதிகள்—கற்றவரும் அது அறவே அற்றவரும்-சமஷ்டி என்பது பிரிவினையே ஆகும்- இந்த நாட்டைப் பிளக்கும் ஒரு அடாதசெயலாகும்— கூறுபோடும் கூடாத மார்க்கமாகும் என்றே கூறி வருகிறார்கள்: இதனின்றும் தெளிவாவது என்ன? வேற்றுமையிலே ஒற்றுமைகாண வழி கூறும் நம்மை வகுப்புவாதிகள் எனவர்ணிப் போர்-உண்மையை அறவே மறுக்கும் இழிசெயலால் நீதி நியாயம் என்பனவற்றை உதறித்தள்ளும் கயமைத்தனத்தால்— நாட்டின் பிளவுக்கு இயற்கையான வழியமைக்கிறார்கள்.


### ஐவர் ஜென்னிங்ஸ் கூற்று

இன்று இந்த நாட்டிலேயுள்ள அல்லோல நிலைமையை அறிந்த, இலங்கையரசியல் திட்டத்தின் சிற்பியான சேர் ஐவர் ஜெனிங்ஸ் சமீபத்தில் கூறியிருப்பது உண்மையை உணரமறுக்கும் உலுத்தர்களுக்கு ஒரு உருக்கமான ஆலோசனையாகும்

''இலங்கைக்கு எந்தவிதமான அரசியல் திட்டம் வேண்டும்-அது எவ்வாறு திட்டம் மொழி உரிமையோ வேறெந்த உரிமையோ நிரந்தரமாக அளித்துவிடமுடியாது. அதுவும் பல திறப்பட்ட அரசியல் கொள்கையுள்ள கட்சிகள் நாட்டிலே இடம் பெற்றிருக்கின்போது இறுதிவரை அமைதியை மக்கள்ஒருகால் விரும்பினாலும், அரசியல் திட்டம் மறுத்துவிடும்:

### திட்டமிட்ட சூழ்ச்சி

பௌத்தசிங்களப் பெரும்பான்மையினர் ஒற்றையாட்சித் திட்டத்தை ஆயுதமாகக்கொண்டே இந்த நாட்டின் பங்காளிகளான சிறுபான்மையினத்தை அழிக்கத் தீவிர முயற்சியில்



ஈடுபட்டுள்ளனர். தமிழ் பேசும் மக்களை அடக்கி

**வே. செழியன்**

யொடுக்கி நசுக்கித்துன்புறுத்துவதன் மூலம் அழித்தொழிக்கக் கங்கணம் கட்டிவிட்டனர். அதற்கான தீவிர மார்க்கமே சிங்கள மொழி மட்டும் சட்டம், தற்போதைய குடியேற்ற திட்டம், சமையல் சாப்பாடு என்று இருக்கின்றபோது தலையீடில்லாத வாழ்க்கை நடக்கிறது ஆனால் குடும்பம் சம்பந்தமான விவகாரம்வரும்போது பெரியவர்கள் ''பொறுப்போடு தலையிடுகிறார்கள்-'' அந்தந்த வேளைகளில் மட்டுமே! இது ஒரு சமஷ்டி அமைப்பு என்றால் மிகையாகாது.

### உலகநாடுகளில் சமஷ்டி

பல்வேறு நாடுகளிலெல்லாம்-இலங்கையில் பார்க்க, இன மொழி, சாதி சமய சிக்கல்கள் தவிர்க்கமுடியாத அளவு இறுக்கமுற்றிருந்த எத்தனையோ நாடுகளிலே— நோய்மாற்றும் அருமருந்தாக உபயோகப்பட்டது சமஷ்டி ஆட்சிமுறையேயாகும். பிரபுத்துவ நாடு எனப்படுகின்ற அமெரிக்காவிலே—கனடாவிலே, பொதுவுடமை நாடான சோவியத் ருஷ்யாவிலே, முற்போக்கு நாடுகள் எனப்படுகின்ற யூகோசிலாவாக்கியாவிலே— இவற்றைவிட சனநாயக நாடுகளான அவுஸ்திரேலியாவிலே, நியூசிலாந்திலே, பாரதத்திலே, மாலாயாவிலே எல்லாம் பல தரப்பட்ட நோய்களுக்கு அருமருந்தாக சமஷ்டியாட்சியே உதவியிருக்கிறது, வெற்றிகரமாக நடந்து வருகிறது!

ஒற்றுமையாக வாழ இதுவே தக்கமார்க்கம் எனச் சிக்கலான அனுபவத்தின் மூலம் அறிந்த அரசியற் பெருமக்கள், இந்த பிரச்சினைகளுக்குத் தீர் வான முடிவுகாணும் முகமாக ஏற்றுக்கொண்ட ஒரு ஒப்புவமைற்ற அரசியல் தத்துவம் சமஷ்டித் தத்துவம்.

### அறச்சமர்

ஒரு நாட்டிளே வசிக்கின்ற ஒருமொழி பேசும் முக்கிய சிறுபான்மையினம் மற்று

# ஒப்பந்தங்களும் மனமாற்றங்களும் உரிமைகளை நிரந்தரமாக்காது

அமைந்திருக்கவேண்டும் என்று விரும்புகிறீர்கள் என்று அப்போதைய சபை முதல்வர் திரு. டி. எஸ். சேனநாயக்காவைக் கேட்டேன். தற்போது ஆங்கிலேயரிடம் இருக்கும் ஆட்சிப் பொறுப்பை எமது மந்திரிமாரிடம் மாற்றிவிட்டால் அதுவே வேண்டப்படுவது என்றார். அதிகார மாற்றம் ஒன்றே போதுமானது என்று நானும் கருதினேன். அப்போது, இன்று உருவாகியுள்ள சீரழிவான நிலையை நாம் தூரக் கண்கொண்டு நோக்கியிருந்தால்- சிறுபான்யோர் உரிமைபற்றிச் சிறிதளவாவது சிந்தித்திருந்தால் இன்றுள்ள அரசியல் அந்தகாரத்தை அறவே தடுத்திருக்கலகம்''

இதுவே அரசியல் மேதையான ஜெனிங்ஸ் சமீபத்தில் பி. பி.சியில் நிகழ்த்தி சொற்பொழியின் ஒரு பகுதியாகும். படைத்தவனே தவறு என்கிறான். படைப்பை அநுபவிப்பவன் அவனையும்பார்த்துச் சிரிக்கிறான்!

### ஒற்றையாட்சியின் கீழ் விமோசனமில்லை

எந்தவிதமான மனமாற்றம் ஏற்பட்டாலும், எத்தனைதான் ஒப்பந்தங்கள் உருவாகி அழிந்தாலும் நடைமுறையிலிருக்கும் ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் தமிழராய எமக்கு விமோசனமேயில்லையென்பதைஎவரும் உணர்ந்தேயாகவேண்டும். மொழியுரிமை மட்டும் இந்தத் தொல்லையை நீக்கும் எனக் கருதுவோர் சிறிது சிந்திக்கவேண்டியவர்கள். ஒரு இனப் பெரும்பான்மையின எதேச்சாதிகாரத் ...

நீதிமன்ற மொழிச் சட்டம் என்பனவாகும்.

இதையுணர்ந்தே இணைப்பாட்சியொன்று உருப்பெற வேண்டுமென்று வற்புறுத்துகின்றனர் தமிழ் மக்கள். பல திறப்பட்ட தேசிய இனங்கள் வாழுகின்ற உலகத்து நாடுகளிலே அவ்வினங்களின் மொழி கலாசாரப் பண்பாடுகள் எவையாயிருந்தபோதிலும், அந்த நாட்டுக்கே உரியவர் என்ற உரிமை நிலையை வலுப்பெறச் செய்து அதன் மூலம் நாட்டு முன்னேற்றம் ஏற்படுவதற்காக, அரசியல் அறிஞர்கள் ஆட்சிமுறை நிபுணர்கள் கண்ட முறை இந்த இணைப்பாட்சி முறையாகும்.

### இணைப்பாட்சியென்றால் என்ன?

ஒரு மத்திய அரசாங்கம் அமைந்திருக்க முழுக்க, முழுக்க உள்நாட்டு விவகாரங்களை மட்டும் நிர்வகிக்கும் பிரதேச சுயாட்சியுள்ள மாகாண அரசாங்கங்கள் ஏற்படுவதே இணைப்பாட்சி முறையாகும். இணைப்பாட்சி அதாவது சமஷ்டி-என்பது மானிட சமுதாயம் அறிந்திராத-அனுபவித்திராத ஒரு புதிய அரசியல் வழியல்ல. சாதாரண மனித வாழ்க்கையில் இந்த முறை அமைந்திருப்பதை நாம் உன்னிப்பாகக் கவனித்தால் காணமுடியும். ஒரு குடும்பத்திலே பெரியவர்கள் தாயும், தந்தையும் — அவர்களுக்குப் பிள்ளைகள்- வளர்ந்தவர்கள். மணம் செய்தவர்கள்-தனிக் குடித்தனம். நடத்துவதை விடுத்துப் பெற்றோருடனே வாழுகிறார்கள் என வைத்துக்கொள்வோம். தங்கள் ...

மொரு மொழிபேசும் பெரும்பான்மையினத்தவரிடம் தம் அரசியல், கலாசார, பொருளாதாரத் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பைக் கையளித்து ஒடுங்கிவாழ்தல் அபாயகரமான செயலாகும்: அச்செயல் அரசியல் தற்கொலைக் கொப்பாகும். தமிழ்மக்கள் பண்டுதொட்டு வாழ்ந்துவரும் அவர்தம் தாயகமான தமிழ்ப் பகுதிகளில் தமது உள்நாட்டு நிர்வாகப் பொறுப்புக்களை நிர்வகிக்கும் உரிமையைக் கோரிச் செய்யும் அறச்சமரே இன்றைய போராட்டம்.

## மண்டபத்தடி மருத்துவமனை வைத்தியசாலை

கள்ளன்குடா, குறிஞ்சாமுனை மண்டபத்தடி, கனையாக்கந்தீவு, இலுப்பையடிச்சேனை, சோத்தியாபுலை. பாவற்கொடிச்சேனை ஆகிய கிராமங்களில் வைத்திய வசதிகள் பெறமுடியாது ஒரு மைல் நீளமான மட்டக்களப்பு வாவியை வள்ளங்கள்மூலம் கடந்து வைத்திய சிகிச்சை பெற்றுவந்த பல ஆயிரக்கணக்கானவர்களின் நலன் கருதி மண்டபத்தடியில் ஒரு வைத்திய சாலையும்—மருத்துவமனையும் அமைக்க திரு. செ. இராஜதுரை எடுத்த முயற்சி வெற்றி பெற்றது,

சில மாதங்களுக்கு முன் சுகாதார அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. கு. பாலசிங்கம் மேற்படி மருத்துவமனைக்கும் வைத்தியசாலைக்கும் அடிக்கல் நாட்டினார். மேற்படி கட்டிட வேலைகள் வெகு துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன

# இந்து சமயத்தின் கலாசார பாரம்பரியங்களை நிலைநாட்டும்வல்லமைதமிழரசுக்கட்சிக்கேயுண்டு

"கோணேசராலய புனித நகர்ப் பிரச்சினையை அரசியல் பிரச்சினையாக்காதீர்" என்று திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபைத் தலைவர் டாக்டர் க. சு. சித்திர வேலு அவர்கள் பத்திரிகைகளுக்கு (சுதந்திரன் அல்ல) விடுத்துள்ள அறிக்கை கண்டு சைவப் பெருமக்கள், சிரிப்புக் கிடமான ஒரு விடயம் என்று கருத்துத் தெரிவிக்கின்றனர். திருகோணமலையில் ஐ. தே. க. யின் டிக்கட்டுக்காக ஓடித் திரிந்து அலுத்துப் போய், கடைசியில் சமாதான நீதவான் பட்டத்துடன் ஆறுதலடைந்திருக்கும் வைத்திய கலாநிதி அவர்களின் வெத்து வேட்டுக்களை புட்டு வைத்துக் காட்டுகின்றார் திருகோணமலை பத்தாம் குறிச்சி வாலிப முன்னணித் தலைவர் திரு. சி. சச்சிதானந்த வேல் அவர்கள், தனது கீழ்கண்ட அறிக்கை மூலம்!

## கோணேசர் கோவில் உரிமையையும் தமிழரசுக்கட்சி வென்றெடுத்தே தீரும்!

கோணேசராலயத்தை அரசியல் பிரச்சினையாக்க வேண்டாமென்று 6-4-70 வீரகேசரி, சிந்தாமணி போன்ற பத்திரிகைகளில். மேற்படி ஆலய பரிபாலன சபைத்தலைவரும், புதிய சமாதான நீதவானுமான டாக்டர் திரு. க. சு. சித்திர வேலு அவர்கள் விடுத்துள்ள வேண்டு கோளும், 8-4-70 வீரகேசரியில் "கோணேசராலயம் புனித நகராகும். என்னும் தலைப்பில் விடுத்துள்ள பேட்டியும் கண்ணுற்ரேம். இவ்விடயம் எமககு

இவ்வறிக்கையை சுதந்திரன் மூலம் விடுகின்றேன்.

தேசிய அரசாங்கத்தில் தமிழ் அரசுக் கட்சி சார்பில் இருந்த ஒரேயொரு தமிழ் மந்திரி கௌரவ. திரு. செல்வம் அவர்கள் மேற்படி பிரச்சினையில் பிரதமரின் நியாய யீனமான நடவடிக்கைமூலம் மந்திரிப் பதவியை இராஜிஞமாச் செய்தபோதும், தமிழரசுக் கட்சி தேசிய அரசாங்கத்தை விட்டு வெளியேறிய போது இதுவும் ஒரு காரண மாகக் கொள்ளப்பட்ட போ

### சித்திரவேல் ஐயாவே!

### சித்தம் கலங்கியதேன்?

வேதனையைத் தரவில்லை. விலாப்புடைக்கச் சிரிப்பையே தருகிறது.

ஐ. தே. கட்சியிடம் தேர்தல் வேட்பாளர் டிக்கட் கேட்ட பெரியாருக்கு சமாதான நீதவான் பட்டம் கொடுத்ததும் எழுந்துள்ள ஞானேதயம் இந்துப் பொது மக்களுக்கு அவருடைய வேடத்தை புரிய வைத்து விட்டது. டாக்டர். க. சு. சித்திரவேலு அவர்களுக்கு பதில் அளிக்கும் வண்ணம்

தும் அரசியல் பிரச்சினையாகத் தோன்ருத கோணேசராலயப் புனித நகர்ப் பிரச்சினை தேர்தல் நெருங்கியதும் டாக்டர் சித்திரவேல் அவர்களுக்கு அரசியல் பிரச்சினையாகத் தோன்றுவதன் காரணம் என்ன?


ஸ்ரீமாவோ அம்மையாரின் ஆட்சிக்காலத்தில் அம்மையார் அவர்கள் திருகோணமலை வந்தபோது சீனன்வாடிவரை சென்று 'கோணேசர் ஆலய பரிபாலன சபைத் தலைவர்' என்ற தலைப்பில் மாலை அணிவித்த போதும், தேசிய அரசாங்கம் பதவிக்கு வந்ததும் திருகோணமலை வந்த மந்திரிமார்களை கேணேஸ்வரர் ஆலயத்திற்கு அழைத்து கோவில் எல்லைக்குள் வைத்து மாலையிட்டு வரவேற்று விஷேட பூசை நடாத்திய போதும், சுதந்திர தினங்களில் விஷேட பூசைகள் நடாத்தியபோதும் அரசியல் இல்லாமல் வேறென்ன நினைப்பில் கனம். தலைவர் இவைகளைச் செய்தாரோ? கோணேசருக்குத் தான் வெளிச்சம்.

**சச்சிதானந்தவேல்**

சுதந்திர தினத்தன்று ஆலயத்தில் விசேட பூசை நடாத்தியதை ஆட்சேபித்து கோணேசராலய பரிபாலன சபைச் செயலாளர் இராஜிஞமாச் செய்யும்போது அது அரசியல் சம்பவம் என்று தலைவர் எண்ணவில்லையா?

ஏன் அப்போது இவ்வறிக்கைகளை விடுக்காதிருந்தார்? தேர்தலின் பின் எந்த அரசாங்கம் வந்தாலும் பரிபாலன சபையின் வேண்டுகோளை ஏற்று ஆலயப் பிரதேசத்தைபுனித நகராக்கும் என்று கூறும் ஐயாவே; தமிழரின் ஒத்துழைப்போடு ஆட்சி நாடாத்திய தேசிய அரசாங்கத்தின் பிரதமராக இருந்த டட்லி சேனநாயக்கா அவர்கள் அப்போது செய்யாததையா இனிமேல் பரிபாலன சபையார் கேட்டாசெய்யப்போகின்ருர்கள் உங்களது இந்தக் கருத்தை தமிழ் மக்களும் நம்ப வேண்டுமா?

கோணேசராலயத்தைப் புனித நகராக்கக் கோரித் திருகோணமலையில் கட்சி



சார்பற்ற குளக்கோட்டன் இந்து மன்றம் நடாத்திய பொதுக் கூட்டத்திற்குத் தலைமைதாங்க அழைத்த பேபது தலைமறைவாகியது ஏன்?

8-4-70ல் வீரகேசரியில் விடுத்துள்ள பேட்டியில் "நாங்கள் இந்த திட்டத்தை ஆரம்பத்தில் கொண்டுவந்த போது தமிழ்த் தலைவர்கள் இதற்குச் சாதகமாக எம்முடன் நடந்து கொள்ளவில்லை" என்று குறிப்பிடுகிறீர்களே, ஆரம்பத்தில் தங்கள் சபை இவ்விடயத்தில் காட்டிய அக்கறையிலும் பார்க்ககூடிய அக்கறை தமிழரசுத் தலைவர்கள் காட்டி வருகின்றனரென்பதை தமிழ் மக்கள் நன்கறிவர். இதை தங்களால் எவ்வமயத்திலும் நிச்சயமாக மறுக்க முடியாது?

கோணேசராலயத்தை புனித நகராக்க தாங்கள் சமர்பித்திருக்கும் திட்டங்களில் மூன்ருவது அம்சத்தை சற்று கவனிப்போம்: கோணேசராலயத்தை புனித நகராக்கும் விடயத்தை முதன் முதல் எதிர்த்த சேருவாவில புத்த பிக்கு சுமங்கல ஸ்ரீ நாயக்கதேரோ இப்போது இந்தப்புனித நகர்த்திட்டத்தை ஆதரிக்கின்ருர் என்று குறிப்பிடும் தங்களுக்கு ஓர் வேண்டுகோள். இத்தலைமைப் பிக்கு எப்போது ஆதரவு தெரிவித்தார்? எந்தக் கூட்டத்திலாவது அவ்வாறு கருத்துத் தெரிவித்திருக்கிருரா? அல்லது இது சம்பந்தமாக ஏதேனும் கடிதங்கள் தங்களுக்கு கிடைத்திருந்தால் அதைப் பகிரங்கப் படுத்துவீரா?

ஐயா தங்களை இந்துப் பொதுமகன் என்ற முறையில் ஒரு வினவிடுக்கின்றேன். 1964-ம் ஆண்டில் கூட்டப்பட்ட முதலாவது கோணேசர் ஆலய பரிபாலன பொதுச் சபையில் தலைவராக தெரிவு செய்யப்பட்ட தாங்ஙள் சட்டதிட்டப்படி மூன்று வருடங்களில் அடுத்த பொதுக்கூட்டம் கூட்டிப் பரிபாலன சபைத் தெரிவை இந்துப்பொதுமக்களிடம் ஆறு வருடங்கள் ஆகியும் கையளிக் காததேன்? தலைமைப் பதவிபோய் விடும் என்ற அச்சமா?

தமிழ்ப் பேசும் மக்களின் உரிமைக்காக உழைத்து வரும்ஒரேயொரு கட்சியான தமிழரசுக் கட்சிதான் இப்பிரச்சினைக்கு தீர்வுகாண அருகதை உடைய தென்பதை இலங்கை வாழ்தமிழ் மக்கள் அறிந்திருந்தும், தாங்கள் ஒருவர் அறியாதிருப்பது வேடிக்கையிலும் வேடிக்கை.

இந்து சமயத்தின் கலாச்சார பாரம்பரியங்களை இந்நாட்டில் நிலை நிறுத்த திராணியுள்ள ஒரேயொரு கட்சியான தமிழரசுக் கட்சியினரை இதுவிடயத்தில் வாய்ப்பூட்டுப் போடுவது முறையானதுமல்ல, முடியாததும் எனக் கூறிவைக்க விரும்புகின்றேன்.

---

# தமிழ் நேசமற்ற சிவனேசனின் தகிடுதத்தங்கள் உடுவிலில் பலிக்காது!

உடுவில் தொகுதி மக்கள் அறியாது அன்னியனுக வாழ்ந்த சிவநேசன் என்னும் ஒருவர் தேர்தல் வரப்போகின்றது எனக் கேள்விப்பட்டு சென்ற மாதம் மானிப்பாயில் வாடகை வீடு ஒன்றில் வந்து தங்கியுள்ளார். இவர் தன்னை உடுவில் தொகுதி மக்களுக்கு அறிமுகப்படுத்தும்படியாக பல வேடிக்கையான காரியங்களைச் செய்து வருகின்ருர். இதற்குக் காரணம் உடுவில் தொகுதி மக்கள் தன்னை பாராளுமன்றத்திற்கு அனுப்பிவைப்பார்கள் என்பதேயாகும். ஆனல் இது முயற் கொம்பான காரியமாகும்:

**நகைச் சுவை நாடகம்**

திரு: சிவநேசன் அவர்கள் உடுவில் தொகுதியில் செய்தில் போட்டியிடப் போகிருர் போல் தோன்றுகிறது.

**வேலைதருவாராம்**

திரு. சிவநேசன் தான் படித்தவர், பட்டங்கள் பெற்றவர், ஓர் அறிவாளி, இன்னும் மேலதிக படிப்பு படிக்கப் போவதாகவும், தன்னை பாராளுமன்றத்திற்கு அனுப்பினல் வேலை

**த. தவம்**

யில்லாமல் இருக்கும் உடுவில் தொகுதி மக்கள் எல்லோருக்கும் வேலை எடுத்துத் தருவதாக 'அசத்தியப்பிரமாணம்' செய்து வருகிருர். ஆனல் உடுவில் தொகுதி மக்களோ இவரின் பட்டத்திற்

**இலவச நாடகம்**

இன்னெரு ருசிகரமான சம்பவம். மக்களுக்கு இலவசமாக நாடக நிகழ்ச்சிகளைக் காண்பித்து திரு. சிவநேசன் தானே தலைமை தாங்கி. தானே மலர்மாலைகள் பல வேண்டி தமது கையாட்களைக் கொண்டு தனக்குப் போடுவிக்குமாறு ஒழுங்குபடுத்தி நாடகங்களில் காங்கிரஸ்கட்சியைப் புகழ்ந்து தமிழரசுக்கட்சியை இழிவுபடுத்தி நடித்துக் காண்பித்து உடுவில் தொகுதி மக்களின் வாக்குகளை இலவசமாகப் பெற எத்தனிக்கிருர். இதை உடுவில் தொகுதி மக்கள் நன்கு அறிவார்கள்.

திரு. சிவநேசன் தனது திருவிளையாடல் மூலம் மக்

## இலவச நாடகங்கள் காட்டி மக்களை விலைபேசி வாங்கிவிட முடியாது!

வருகின்றவை எல்லாம் ஒரு நகைச்சுவை நாடகமாகவே அமைந்துள்ளது. இவர் தன்னையும் தனது பெயரையும் உடுவில் தொகுதி மக்களுக்கு அறிமுகப்படுத்து முகமாக, 'காங்கிரஸ் கட்சி உடுவில் வேட்பாளர்' திரு. சிவநேசன் B. Sc. (Econ) Lond M. S. C. (Ecen) Lonc. என எழுதி அதன் கீழ் தனது புகைப் படத்தையும் அச்சிட்டு வீதிகளிலும், கள்ளுக் கொட்டில்களிலும் ஒட்டியுள்ளார். இவர் இம்முறை மக்களுக்கு தன்னை அறிமுகப்படுத்தி அடுத்த முறைதான் தேர்தகும், அசத்தியப்பிரமாணத்திற்கும் செவி கொடுப்பதாகத் தெரியவில்லை.

**பொய்ப் பிரசாரம்**

சந்திகளில் உள்ள மரங்களில் பல காங்கிரஸ் கொடிகளைக் கட்டிப் பறக்கவிட்டு தனக்கு உடுவில் தொகுதில் அநேக வாக்குண்டு எனப் பகற் கனவு கண்டு காரில் கொடிகளைக் கட்டி ஒரு நாளுக்கு பன்முறை உடுவில் தொகுதியை சுற்றி வலம் வந்து பொய்ப் பிரசாரங்களை பரப்புகின்றனர் பாவம்! பார்க்கப் பரிதாபமான நிலை ஏற்படுகிறது.

களின் வாக்குகளைப்பெற எத்தனிக்கிருர்: இதற்கு உடுவில் தொகுதி மக்கள் ஒரு சிறிதேனும் இடம் கொடுக்க மாட்டார்கள். இவரின் திருவிளையாடல்களும் பலிக்க மாட்டாது: இதன் பலாபலனை வருகிற மாதம் 27ம் திகதி சிவநேசன் அவரின் வால்களும் அறிவார்கள் இது நிச்சயம்.

சிவநேசன் தன்னுலே தனது தொகுதியில் காங்கிரஸ் கட்சியில் பிளவு ஏற்பட்டதையிட்டு மனம் வருந்தியிருப்பார். இதனல் இம்முறை சென்ற முறையிலும் பார்க்க அநேக வாக்குகளினல் திருவாளர் த. தருமலிங்கத்தை பாராளுமன்ற உருப்பினராகத் தெரிவுசெய்து உடுவில் தொகுதி மக்கள் யாவரும் வீரத்துடன் கிரண்டுள்ளனர்.

வாழ்க தமிழரசு! வாழ்க தமிழ் இனம!

---

## கொள்கை விளக்கக் கூட்டம்

சாவகச்சேரி, ஒப். 8—

இலங்கைத் தமிழரசுக் கட்சிச் சாவகச்சேரித் தொகுதியின் கொள்கைவிளக்கக் கூட்டம் சமாதான நீதவான் அ. சின்னையா அவர்கள் தலைமையில் கைதடியில் 13-4-70 நாள் திங்கட்கிழமை மாலை 7 மணிக்கு நடைபெறும்.

தென்மராட்சி வாலிப முன்னணி வீரர்கள் கல்லடி மூட்டிலுல்ல கட்சிக் கந்தோரிலிருந்து மாலை 3 மணிக்கு கடமைவீரர் அவர்கள் தலைமையில் புறப்பட்டுச் செல்வார்ங்கள்.

## மாபெரும் பொதுக்கூட்டம்

(கைதடி நிருபர்)

இம்மாதம் 13-ம் திகதி திங்கட்கிழமை சாவகச்சேரி தொகுதி வேட்பாளர் கடமைவீரன் நவத்தை ஆதரித்து மாபெரும் பிரசாரக் கூட்டம் கைதடி சந்தியில் நடை பெறவுள்ளது. இக் கூட்டத்திற்கு இ. சிதம்பரன் கைதடி கி. ச. உ. தலைவர் தலைமை தாங்குவார்.

மிகப் பிரமாண்டமான ஊர்வலம் கொடிகாமத்திலிருந்து பி. ப. 3 மணிக்கு ஆரம்பமாகி கட்சி காரியாலயத்தை வந்தடைந்து அங்கிருந்து ஆரம்பமாகி கூட்ட மைதானத்தை வந்தடையும்.

---

## சங்கிலியம் வெளிவருகிறது.

யாழ்ப்பாணம் சித்திரை 13 கடந்த ஆண்டு சாகித்திய மண்டலப் பரிசுபெற்ற, கவிஞர் காரை-செ. சுந்தரம் பிள்ளை, எழுதிய சங்கிலியம் என்னும்காவிய நூல் 22.4.70ல் வெளிவருகிறது யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த மாபெரும் வீரனும் தேசபக்தனும், தமிழ்க் காதலனுமாகிய முதலாவது சங்கிலி மன்னனின் வாலாற்றைக் கூறும் இவ்வீரகாவியம் முதலாவது பரிசுபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. யாழ் இலக்கிய வட்டத்தினர் ஈழநாடு நிறுவனத்தாருடன் சேர்ந்து வெளியிடும் இந்நூலின் வெளியீட்டுவிழா யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சுதந்திரன்
SUTANTIRAN

மலையகத் தமிழருக்கு குடியுரிமை வழங்குவதற்கும்

# சிங்கள மொழித் தேர்ச்சி கவனிக்கப்படவேண்டுமாம் பௌத்த காங்கிரசின் இனவெறி

கொழும்பு, ஏப். 13— இலங்கை—இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இந்திய வம்சாவளியினருக்கு பிரஜாவுரிமை வழங்கும் போது அவர்களின் சிங்கள மொழி தேர்ச்சிபற்றியும் முக்கிய கவனம் செலுத்த வேண்டும்' — இவ்வாறு அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் அடுத்துப் பதவிக்கு வரும் அரசாங்கத்திடம் கோரவிருக்கிறது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் பௌத்த சிங்களவர்களை ஏராளமாகக் குடியேற்ற வேண்டுமென்பது பௌத்த காங்கிரசின் மற்ருேர் கோரிக்கையாகும்; இதனுல் மட்டுமே கள்ளக் குடியேற்றத்தைக் கட்டுப்படுத்தலாமென்றும் வடக்கு கிழக்கு மக்கள் சட்டவிரோததக் குடியேற்றத்தை தடுத்து நிறுத்த பூரணமாக, ஒத்துழைப்பதில்லை என்றும் பௌத்த காங்கிரஸ் அறிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது.

## தமிழ்மொழிச்சட்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களை ஒரு போதுமே கைவிட்டதில்லை. தமிழ்மொழிச்சட்ட விதிகளைப் படித்துப் புரிந்து கொள்ளும் ஆற்றல் அற்ற— திறமையற்ற பிறவிகள்தான் இப்படி அலட்டுகிருர்கள். தமிழ் மொழிச் சட்ட விதிகளின்படி இலங்கையின் எந்த ஒரு மூலை முடுக்கில் வாழும் எந்த ஒரு தமிழ் மகனும் அரசாங்கத்துடன் தமிழில் தொடர்பு கொண்டு தமிழில் பதில் பெறும் அடிப்படை மொழி உரிமையை தமிழரசுக்கட்சி நிலைநாட்டியிருக்கிறது. இதையறியாமல் பிதற்றும் பித்தர்களுக்கு தமிழ் மக்கள் தகுந்த பாடம் கற்பிப்பார்கள்.

'தமிழ் நாட்டு தமிழர்களின் ஒரே கட்சி தி. மு. கழகம். அதுபோல ஈழத் தமிழர்களின் ஒரே கட்சி தமிழரசுக் கட்சி தமிழ் நாட்டுமக்களின் ஒரே தலைவன் பேரறிஞர் அண்ணு: அது போல ஈழத்தமிழர்களின் ஒரே தலைவன் செல்வா. இதை மூடி மறைக்க ஆயிரம் சுழியன்கள் முன்வந்தாலும் முடியாது.

''இலங்கைத் தி. மு. க. எப்பொழுதும் இன விடுதலைக்குப் போராடும் தமிழரசுக்கட்சிக்கு துணையாகவே செயற்படும் என்பதை இந்நாட்டு தமிழ் மக்களுக்கு உறுதியாக கூற விரும்புகிறேன்.

—இவ்வாறு இ. தி. மு. க' பொதுச்செயலாளர் திரு. ஏ. எஸ். மணவைத்தம்பி சுதந்திரனுக்கு விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

## மீன் மார்கெட்டில் நவரெட்டினராசா?

திருக்கோணமலை, சித். 8- அன்று ''நோடைம் தம்பி. எக்ஸ்கியூஸ் மீ'' என்று சீமானுகக் காட்சியளித்த பழைய டி. ஆர். ஒ. நவரெட்டினராசா இன்று கோணேச பூமியில் சில்லரையாகிவிட்ட நிலைமையைக் காண முடிகின்றது. ஏன் இந்த நிலைமை? பொதுத்தேர்தல் நெருங்குவதினுலா?

சாதாரணமாகக் காண முடியாத திரு. ஆர். நவரெட்டினராசாவை இன்று அங்கிங்கெனுதபடி எங்கும் காணக்கூடியதாக இருக்கின்றது. தற்சமயம் அவரது பார்வை மீன்மார்க்கட் மீது திரும்பியிருக்கின்றது. ஒவ்வொரு நாளும் இம்மீன் சந்தையில்வைத்து அவரைக் காணும் பலர் வியப்படைகின்ருர்கள். ''இது என்ன அதிசயம்! என்றுமே இப்பக்கம் நாடாத நவரெட்டிணராசா இப்பொழுது தாராளமாக வருகின்ருரே'' என்று இங்கு வரும் மக்கள் பேசிக்கொள்கின்ருர்கள்.

என்ன இருப்பிலும், அவர் எப்பக்கம் திரும்பியும் தன்னை விளம்பரப்படுத்திக் கொண்டு திரிந்தாலும் அவருக்கு எதிர்வரும் தெர்தலில் மக்கள் நல்ல பாடத்தைக் கற்பிக்கப் போகின்ருர்கள் என்பது மட்டும் உண்மை,

## கரவெட்டியில் திரு. இராஜதுரைக்கு உற்சாகமான வரவேற்பு

மட்டுநகர்' ஏப். 12 மண்முனை மேற்கு காரியாலய பிரிவிலுள்ள கரவெட்டி கிராமத்திற்கு சில தினங்களுக்குமுன் திரு. செ. இராசதுரை சென்றபோது பொது மக்கள் பெரும் உற்சாகமாக அவரை வரவேற்றனர்.

தமிழ்பேசும் இனத்தை காட்டிக்கொடுக்காமல் எங்கள் படுவான் கரைப்பகுதியில் சிங்களக் கலப்பு இல்லாமல் தடுத்து தனிததமிழ் பகுதியாக வைத்திருந்து— பாராளுமன்றத்திற்குபோவதற்கு ஒரு கொள்கை— போனபின் மற்றுமொரு கொள்கை என்று தமிழ் பேசும் இனத்திற்கு அவமானத்தை தேடித்தராமல் தன்மானமும், தமிழ் மானமும், மட்டக்களப்பு மண் மானமும் காப்பாற்றிய தங்களுக்கே இம்முறையும் எங்கள் வாக்குகள் என்று வயோதிபர்கள். இளைஞர்கள் கூறி உற்சாகமாக வரவேற்றனர்.

கரவெட்டி வீதியை கல்வீதியாக மாற்றியது, பஸ் சேவை ஆரம்பித்து கொடுத்தது—பாடசாலை உருவாக்கி வைத்தது—குடியிருப்புக்கு நிலமளித்தது—விவசாயத்திற்கு காணி வழங்கியது ஆகிய சேவைகளைச் செய்த உங்களை மறப்பது நன்றி மறப்பதாகும் தம்பி, என்று கூறிய வயோதிபர் 15 வருடங்களுக்குமுன் தான் கண்ணுடிப்பிரேம் போட்டு வைத்திருக்கும் திரு. செ. இராஜதுரையின் புகைப்படத்தை ஆர்வமேலீட்டால் களற்றிக் கொண்டு வந்து வந்திருந்த ஆதரவாளர்களுக்கு காட்டினுர்.

## தேர்தல் பிரசுரங்கள் தேவை

பொதுத்தேர்தல் வந்து விட்டது; ஒவ்வொரு தொகுதியிலும் துண்டு பிரசுரங்கள், அறிக்கைகள், விஞ்ஞாபனங்கள், தேர்தல் வெளியீடுகள் விநியோகிக்கப்பட்டுவருக்கின்றன.

பல்வேறுகட்சிகளும் பல்வேறு அபேட்சகர்களும் இவற்றை வெளியிட்டுவருகிருர்கள்.

இத்தகைய தேர்தல் பிரசுரங்களைப் பெறும் நமது அபிமான வாசகர்கள் தயவுசெய்து ஒவ்வொரு பிரதியை சுதந்திரனுக்கு அனுப்பி வைக்கும்படி வேண்டுகிருேம்.

தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிப் பிரசுரங்களையும் அனுப்பிவைக்க வேண்டும். சிங்கள ஆங்கிலப் பிரசுரங்களில் வெளியாகும் தகவல்களை தமிழில் தரமுயற்சிப்போம்,

தமிழில் வெளியாகும் மாற்றுக்கட்சி, மாற்றுக் கொள்கைகளுக்கு முடிந்த வரை பதிலளிப்போம்.

தமிழரசுக்கட்சி சார்பில் ஆங்காங்கே வெளியாகும் தமிழரசுக்கட்சிப் பிரசுரங்களையும் அனுப்பி உதவுமாறு தமிழரசு அபிமானிகள் கோரப்படுகிருர்கள்.

உள்ளூரில் வெளியாகும் பிரசுரங்களுக்கு மறுப்பு எழுதக்கூடிய நிலையில் உள்ளவர்கள் பிரசுரத்தோடு சேர்த்து மறுப்பும் எழுதியனுப்பினுல் அவை இடத்துக்கும் தரத்துக்கும் தக்கதாக சுதந்திரனில் பிரசுரிக்கப்படும்.

ஆசிரியர்.

## சந்திர பயணம்...

(1-ம் பக்க தொடர்ச்சி)

கள், ஏப்ரல் 17 பி. ப. 5-52 மணிக்கு சந்திரனை விட்டு புறப்படுவார்கள்; ஏப்ரல் 22 புதன்கிழமை அதிகாலை 1-47க்கு பசுபிக் கடலில் இறங்குவார்கள்.

## தமிழரசு வாலிப முன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கின்ற பத்தாம் குறிச்சிக் கிளையினர் பொலிஸாரின் கண்களுக்கு இலக்காகியது அவ்வளவு ஒன்றும் குறிப்பிடத்தக்கது அல்லவென்று பொது மக்கள் பேசிக்கொள்கின்ருர்கள்

# கேட்கிறேன் ஒரு கேள்வி

சுய ஆதாயத்துக்காக கட்சி வைத்து தொழிலுக்காக அரசியல் நடத்துகிறவர்கள் தமிழரசுக் கட்சிக்காரர்கள் என்று அநியாயப் பழி சுமத்துகிருர்கள் எங்கள்மீது வழக்கமாகக் கிண்டல் தொடுக்கும் தொண்டைப்பிறவிகள்!

'சத்தியாக்கிரகத்தில் சேர்த்த காசு எங்கே?' என்று எத்தனை ஆண்டுகளாக நீங்கள் எங்களைப் பார்த்துக் கேட்கிறீர்கள்? பத்தாயிரம் தடவைகள் நாங்கள் பதிலிறுத்த பின்பும் இன்னுந்தான் சத்தியாக்கிரகக் காசுக்குக் கணக்குக் கேட்கிறீர்கள்?

காசு தந்த கட்சித் தொண்டன் காசுக்குக் கணக்குக் கேட்கவில்லை! சத்தியாக்கிரகம் நிகழ்ந்த வேளையில் காசு செலவழித்து சத்தியாக்கிரகத்தைக் கிண்டல் செய்து துண்டுப்பிரசுரம் வெளியிட்ட நீங்கள்தான் எங்கள் காசுக்குக் கணக்குக் கேட்கிறீர்கள்;

தமிழரசுக்கட்சிக்காரன் தன்னையே தமிழுக்காக அர்ப்பணித்து வாழும் வாழ்வை சந்தி விமர்சகர்களே...ஏன் உங்கள் சிந்தைகள் எண்ணிப் பார்த்ததில்லை?

ஓய்வின்றித் தமிழினத்துக்காக உழைக்கும் எங்கள் தந்தை செல்வா நினைத்தால் ஒரு நொடியில் ஈழத்தின் ஒரு பெரிய அமைச்சர் பதவியைத்தாங்கி அரசாங்கத்தின் ஆயிரக்கணக்கான ரூபாககளைப் பெற்றுக்கொண்டு சொகுசாக வாழமுடியாதா?

உடல் நோயுற்ற நிலையில் இருக்கும் எங்கள் உணர்ச்சித்தலைவர் டாக்டர் நாகநாதன் நினைதால் ஏதாவது ஒரு வெளிநாட்டில் இலங்கையின் வெளிநாட்டுத் தூதராகச் சென்று அரசாங்கத்திடம் சுளை சுளையாகக் காசு பெற்றுக்கொண்டு சுகமாக வாழ இயலாதா!

தளபதி அமிர்தலிங்கம் நினைத்தால் ஈழநாட்டின் தலை சிறந்த ஒரு முடிக்குரிய வழக்கறிஞராகி பல்லாயிரம் ரூபாக்களுக்குச் சொந்தமான பணக்காரனுய் வாழ இயலாதா?

எங்கள் தலைவர் இராசமாணிக்கம் நினைத்தால் ஈழத்தில் ஒரு பெரிய கூட்டுத்தாபனத்தின் தலைமைப் பதவியைத் தாங்கி அரசாங்கப் பணத்தில் இன்ப வாழ்வு நடத்தமுடியாதா?

கல்குடா மாணிக்கவாசகர் நினைத்தால் வேளாண்மையில் கவனத்தைச் செலுத்தி பரம்பரை பரம்பரையான தன் பழைய செல்வக்குடும்பத்தின் புகழை நிலைநிறுத்தி கிழக்கிலங்கையின் ஒரு செல்வச் சீமானுக திகழ இயலாதா?

பருத்தித்துறை துரைரெத்தினம் நினைததால் அரசாங்கத்தின் பாதம் தாங்கி குறுக்கு வழியில் ஒரு பெரிய வியாபாரி ஆகி பல இலட்சம் ரூபாக்களின்மீது படுத்துறங்கமுடியாதா?

சாவகச்சேரி நவரெத்தினம் நினைத்தால் தாடி வளராத அழகு முகத்தோடு கோடி வழக்குகள் நடத்தி காசு சேர்தது மாடி மனையிலே மகிழ்ந்து கிடக்க முடியாதா?

இத்தனை வாய்ப்புக்களையும் இழந்து இராணுவத்திடமும பொலீசாரிடமும் இதயமற்ற சிங்கள வெறியரிடமும் குத்தும் உதையும் வாங்கிக் குருதி கொட்டித் துடிக்க எங்களுக்கெல்லாம் என்ன கொழுப்பா?

தமிழ் எங்களுக்கு மட்டுந்தான் சீதனமா?
தமிழுக்காக அடி வாங்குவதும் அழுந்துவதும் எங்களுக்கு என்ன தலையெழுத்தா?

ஒவ்வொரு தமிழரசுக்' கட்சித் தலைவரினதும் தொண்டரினதும் வீட்டில் எவ்வளவு வறுமையும் துன்பமும் நிறைந்துகிடக்கின்றன என்ற வேதனையான உண்மை உங்களுக்கு எங்கே தெரியப்போகிறது!

சத்தியாக்கிரகக் காசுக்குக் கணக்குக் கேட்போரே! இயக்கப்பணத்தில் கைவைக்கும் அளவுக்கு நாங்கள் சத்தியம் கெட்டவர்களல்ல என்பதை இப்போதாவது தெரிந்துகொள்ளுங்கள்!

'நாங்கள் எங்களை அழித்துக்கொண்டு தமிழினத்தை வாழ வைப்பவர்கள்!

புரிகிறதா?

எழில் தமிழ் ஆளர்
செ. இராஜதுரை,

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயகவீதி, 194 ஏ இல்லத்தில் 1970.ம் வருடம் ஏப்பிரல் மாதம் 13-ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

ஆசிரியர்: கோவை மகேசன்